10/=
பக்கங்கள் 08
Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 330 வியாழக்கிழமை 19 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18



## மாநகர சபைக்கு உதவ மத்திய அரசு தயாராம்

யாழ்ப்பாணம், ஏப்.19

யாழ். மாநகரத்தினை அழகுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் மற்றும் பணிகள் தொடர்பாக யாழ். மாநகர முதல்வர் ஆர்னோல்ட், வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பு சுண்டிக்குளியில் அமைந்துள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின் போது மாநகர அபிவிருத்திப் 06▶



## சுமந்திரனே சதிகாரர்!

யாழ்ப்பாணம், ஏப்.19

"சதியைச் செய்பவரே சதியை நேரே பார்த்தேன் என்று கூறுவதில் எந்த வித அர்த்தமும் இல்லை. சதியைப் பற்றிப் பேசுவதற்கு சுமந்திரனுக்கு எந்த வித யோக்கியமும் கிடையாது. உண்மையில் அவர்தான் சதிகாரர்"என ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஷ்பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

வவுனியா நகரசபையில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் ஈ.பி.ஆர்.எல்.எப் ஆட்சியை அதிரடியாகக் கைப்பற்றியது. கூட்டமைப்புக்கு ஆதரவாக நடுநிலைமை வகிக்கப் போவதாகச் சொல்லிவிட்டு அதற்கு 06▶

## முதலமைச்சர் விக்னேஸ்வரன்
# நாடு திரும்பியதும் புதிய கூட்டணி




யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

வடக்கு மாகாண முதலமைச்சர் இந்தியாவில் இருந்து திரும்பியதும் புதிய கூட்டணி பற்றிய அறிவிப்பை வெளியிடுவார் என்று நம்பகமாகத் தெரியவருகின்றது.

அடுத்த மாகாண சபைத் தேர்தலில், இப்போதைய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு கூட்டமைப்பின் சார்பில் வாய்ப்பளிக்க 06▶

## மே 18
### ஓரணியில் அஞ்சலிப்போம்!
யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.19

"மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை சகல தரப்புகளும் ஒன்றிணைந்து, பேரெழுச்சி மிக்க ஒரு நிகழ்வாக நடத்த வேண்டும்" என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அரசியல் கட்சிகளுக்கும், பொது அமைப்புகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

இது குறித்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்ட விடயங்கள் வருமாறு-

"மானுடத்தின் மதிப்பினைப் பேணிக்காப்பதில் அக்கறை 06▶



## அரசைக் கவிழ்க்க வேண்டும்
### வாசுதேவ அறைகூவல்

கொழும்பு, ஏப்.19

அடுத்த பொதுத் தேர்தல் நடத்தப்படும் வரை காத்திருக்காது உடனடியாக அரசாங்கத்தை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் பொதுச் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியை இரத்துச் செய்ய வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணி கொண்டு வரும் திருத்தச் சட்டம் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

"அடுத்த பொதுத் தேர்தல் வரை தற்போதைய அரசாங்கம் ஆட்சியில் இருப்பது கூட்டு எதிர்க்கட்சிக்கு சாதகமாக அமையும் என சிலர் 06▶

### கனடா இளைஞன் கொலை
## புகார் செய்யாத மர்மம் என்ன?
உயிரிழந்த இளைஞனின் தாய் தகவல்

யாழ்ப்பாணம், ஏப்.19

"புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதால் எங்கள் மகன் தலைமறைவாக இருப்பதாக நினைத்தே கனடா அரசிடம் அவர் காணாமல் போனமை குறித்து முறையிடவில்லை.

அத்துடன் 06▶

## பாண்டியன்குளம் பறிபோனது

முல்லைத்தீவு, ஏப்.19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக ஆசனங்களைக் கைப்பற்றியிருந்த போதும், முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு (பாண்டியன் குளம்) பிரதேச சபையை அகில இலங்கை மக்கள் காங்கிரஸிடம் பறிகொடுத்துள்ளது.

குறித்த பிரதேச சபையின் தவிசாளர், உப தவிசாளர் தெரிவுகள் நேற்று இடம் பெற்றன.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன தத்தம் கட்சிகளின் சார்பில் தவிசாளர் பதவிக்கு 06▶

## முதலமைச்சருடன் இணையத் தயார்
### சுரேஷ் அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.19

வடக்கு மாகாண முதலமைச்சர் புதியதோர் கட்சியொன்றைத் தொடங்க இருக்கிறாரா அல்லது பொதுக்கூட்டணியை உருவாக்க இருக்கிறாரா என்பது இன்னும் தெரியவில்லை. ஆயினும் சரியான கொள்கையை வகுத்து முதலமைச்சர் செயற்பட்டால், அவருடன் 06▶

## சரா எம்.பிக்கு குருதியால் திலகமிட்டவர் தற்கொலை



யாழ்ப்பாணம், ஏப்.19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனுக்கு இரத்தத் திலகமிட்ட ஆதரவாளர், தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஈ.சரவணபவனுக்கு, அவரின் தீவிர 06▶

# அமெ. மிதக்கும் மருத்துவமனை விரைவில் இலங்கை வருகை



கொழும்பு, ஏப்.19

அமெரிக்காவின் பசுபிக் ஒத்துழைப்பு ஒத்திகைத் திட்டத்தின் ஒரு கட்டமாக, அமெரிக்கக் கடற்படையின் மிகப்பெரிய மிதக்கும் மருத்துவமனை இலங்கை வரவுள்ளது.

சான் -டியேகோவை தளமாகக் கொண்ட USNS Mercy என்ற இந்த மருத்துவமனைக் கப்பல், தற்போது மலேசியாவில் தரித்துள்ளது.

2018 ஆம் ஆண்டு அமெரிக்க மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த நிவாரண தயார்ப்படுத்தல்களை மேற்கொள்வதற்காக ஆசிய-பசுபிக் ஒத்துழைப்பு திட்டத்தின் கீழ் இரண்டு கப்பல்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய பெப்ரவரி மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில், USNS Mercy என்ற மருத்துவமனைக் கப்பல் இந்தோனேசியா, மலேசியா, இலங்கை,வியட்னாம் ஆகிய நாடுகளுக்கும், USNS Fall River என்ற கப்பல், மலேசியா, தாய்லாந்து, மைக்ரோனேசியாவில் உள்ளயாப் ஆகிய இடங்களுக்கும் பயணங்களை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# புலனாய்வுப் பணிப்பாளருக்கு விளக்கமறியல் நீடிப்பு





கொழும்பு, ஏப்.19

ஊடகவியலாளர் கீத் நோயாரை கடத்தி தாக்குதல் நடத்த உத்தரவிட்டதாக கூறப்படும் இலங்கை இராணுவத்தின் முன்னாள் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளரும், பாதுகாப்பு விஞ்ஞானப் பிரிவின் நிறைவேற்று அதிகாரியுமான ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அமல் கருணாசேனவுக்கான விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அவரை எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிஸை மேலதிக நீதிமன்ற நீதவான் லோச்சனி அபேவின்ரம நேற்றுப் புதன்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

தேசியப் பத்திரிகையான த நேசன் பத்திரிகையின் இணை ஆசிரியரான கீத் நோயார் கடந்த 2008ஆம் ஆண்டு மே 22ஆம் திகதி கொழும்பு தெஹிவளை பிரதேசத்தில் வைத்து கடத்திச் செல்லப்பட்டு கடுமையான தாக்குதலுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்த சம்பவத்துக்குப் பின்னால் விசாரணைகளுக்கான அழுத்தங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் ரணில் - மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னரே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாக தெரிவித்து ஊடகவியலாளர் கீத் நோயார் அவுஸ்ரேலியாவில் தஞ்சமடைந்திருந்த நிலையில், விசாரணை அதிகாரிகள் அவுஸ்ரேலியாவுக்குச் சென்று அவரிடம் வாக்குமூலம்,பெற்றுக்கொண்டனர். ஆயினும் நாட்டுக்கு மீள வரும்படி விடுத்த அழைப்பை கீத் நோயார். நிராகரித்திருந்தார்.

த நேசன் பத்திரிகையின் இணை ஆசிரியரான கீத் நோயார் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மேஜர் உட்பட 6 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு இதுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# கிரிக்கெட் துறை அழிவதற்கு அரசியல்வாதிகளே காரணம்

இலங்கைக் கிரிக்கெட் துறை அரசியல்வாதிகளால் அழிக்கப்படுகிறது என முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து வெளிவரும் "த எக்கொனமிக்ஸ் டைம்ஸ்" பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"இலங்கை கிரிக்கெட் அணியில் தற்போது குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. கிரிக்கெட் அரசியல்வாதிகளின் கட்டுபாட்டின் கீழ் உள்ளது. கிரிக்கெட் தொடர்பில் குறைந்த அறிவு அல்லது அறிவில்லாதவர்களால்தான் கிரிக்கெட் அழிவடைந்து செல்கின்றது. ஒருவருடத்துக்குள் மாத்திரம் இலங்கை அணியில் 60 புதிய வீரர்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். வீரர்கள் தங்களுடைய திறமையை வெளிப்படுத்தும் விதத்தில் அவர்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவது அவசியம்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# தேர்தலால் பிரிவினை



நாவிதன்வெளி, ஏப். 19

இந்த நாட்டில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேர்தல் முறை மூலம் எமக்குள் பிரிவினை ஏற்பட்டுள்ளது. இது மாறவேண்டும். தமிழினம் நிலையாக எமது பிரதேசத்தில் வாழ வேண்டும். இதற்காக நாங்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்று நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளர் தவராசா கலையரசன் தெரிவித்துள்ளார்.

நாவிதன்வெளியில் இடம்பெற்ற மாணவர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"தமிழர்கள் இந்த நாட்டின் பூர்வீக இனம். தமிழினம் சுதந்திரமாக வாழ வேண்டும். இதற்காகத்தான் நீண்டகாலமாக ஒரு போராட்டம் நடந்தது. விடுதலைப் போராட்டம் ஆரம்பத்தில் அகிம்சை ரீதியாகத்தான் முன்னெடுக்கப்பட்டது. பின்னர் அது வெற்றி தராத பட்சத்தில் தான் ஆயுதரீதியான போராட்டம் தோற்றம் பெற்றது.

எமது பிரதேசத்தப் பொறுத்த வரையில் சமூகத்தில் பல தவறுகளை செய்த சிலர் அரசியலில் பிரவேசித்து எமது சமூகத்தை கூறுபோடுவதற்கான பல முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றார்கள். இவர்களைப் போன்று பலரை இந்த பிரதேசத்தில் சந்தித்திருக்கின்றோம். 14 வருடகாலத்துக்குள் இந்த பிரதேசத்தில் எமது கட்சியின் உறுப்பினர்கள் ஆயுத ரீதியான தாக்குதல்களால் மரணித்திருக்கின்றார்கள்.எமது இனத்துக்காக, சமூகத்துக்காக, எவர்முன்னின்று உழைத்து வருகின்றாரோ, அவரைத் தான் எதிர்காலத்தில் தலைவராக ஏற்றுக்கொண்டு அரசியலில் முன்னுரிமை வழங்க வேண்டும். " என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# 35 கிலோ கஞ்சாவுடன் மூவர் கைது



யாழ்ப்பாணம்,ஏப்.19

35 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் சங்குப் பிட்டியில் வைத்து, நேற்று மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புத்தளத்தை சேர்ந்த மூவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து பட்டா ரக வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ்விசாரணைகள்இடம் பெற்று வரும் நிலையில், கைது செய்யப்பட்ட மூவரும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட உள்ளனர்.(ஆ)





# குருதி சுத்திரிகரிப்பு நிலையம் திறப்பு

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் குருதிச் சுத்திகரிப்பு நிலையம்நேற்று புதன்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினரும், வைத்திய கலாநிதியுமான ஞானசீலன் குணசீலன் கலந்து கொண்டு, குருதிச் சுத்திகரிப்பு நிலையத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர்களான சுகிர்தன், சிவயோகன் மற்றும் தர்மலிங்கம் வைத்திய அதிகாரிகள் வைத்திய சாலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஆ-11)

எதிரொலி Ethiroli

வியாழன், 19 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com

## காவடியும் தமிழ்த் தேசியமும்

வலிகாமம் வடக்கில், இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள பொது மக்களின் காணிகளில் ஒரு தொகுதி (638 ஏக்கர்), கடந்த வெள்ளிக்கிழமை விடுவிக்கப்பட்டது. இதன்போது மைத்திரி, ரணில், இராணுவத்தளபதி ஆகியோரின் படங்களோடு ஒருவர் காவடி எடுத்து தன் நன்றியைத் தெரிவித்திருந்தார்.

புலிகளின் காலத்தில் வற்றாப்பளை அம்மனுக்கோ, நல்லூரானுக்கோ ஏன் மற்றைய ஆலயங்களின் மீது புலிகளுக்காக நேர்த்தி வைத்து எடுக்கப்பட்ட காவடிகளுடன் ஒப்பிடும் பொழுது அந்த மூவேந்தர் படங்களுடன் கூடிய காவடி விடயம் சாதாரணமானது. அது ஒரு உணர்ச்சி மேலிட்ட நன்றிக்கடன். அப்படியே கடந்து விட வேண்டியதுதான்.

ஆனால் தமிழ்த் தேசியம் பேசுகின்ற கட்சிகளினது நம்பிக்கையீனம் பற்றிய இந்தக் கவலைகள் கடந்த உள்ளூராட்சித் தேர்தலோடு ஏற்பட்டிடுக்கவேண்டும்.

கடந்த மாகாணசபை தேர்தல் நேரம், உயிர்ப்புடன் இருந்த தமிழ்த் தேசியம் அடுத்த உள்ளூராட்சித் தேர்தலில் ஏன் வறண்டு போனது?

1. உத்தியோக பூர்வமாக தெரிவு செய்யப்பட்ட தமிழ்த்தரப்பு (கூட்டமைப்பு/ சுமந்திரன்) மத்திய அரசுடனான எவ்வித நிபந்தனையுமின்றி தாராளமயமான விட்டுக்கொடுப்புடன் எமது பிரச்சினைகளை கையாண்ட விதம்.

2. கூட்டமைப்புக்குள் பேச்சுக்கு தமிழ்த்தேசியம் பேசுவோரைக்கூட அடக்கி அமுக்கிய செயற்பாடுகள்.

3. தனிப்பட்ட விதத்தில் தெற்குடன் நல்லிணக்கமும், வெளிப்படையாக மக்களை ஏமாற்ற தேசியத்தை கையில் எடுத்தமையும்.

4. வடக்கு கிழக்கில் தமிழ்த்தேசியம் சார்ந்து பேசுவோரை எள்ளல், நகைப்புடன் கடந்து சென்ற சமூகவலைத்தளங்கள்.

5. கூட்டமைப்பு என்ற ஆலமரத்தை வெட்டி, தமிழரசு கட்சியாக மாற்ற முனைந்த செயற்பாடு.

இன்னும் பல இருக்கின்றன..

30 வருடங்களுக்கு மேலாக தமிழ்த்தேசியத்தை வளர்த்து வேரூன்றி நாட்டி விட்டு சென்ற விடுதலைப்புலிகளை மறுத்து, அவர்களின் போராட்ட நியாயங்களை குற்றமாக்கி அறிக்கைகளை விட்டுவிட்டு தமிழ்த்தேசியம் வளர்ப்பதென்பது வேடிக்கை.

சுமந்திரன், சம்பந்தர் செய்த அப்பிடியான குளறுபடிகளை நியாயப்படுத்துவதில் இருந்த அக்கறையை தமிழ்த்தேசியம் சார்ந்து, அதை குறைந்து விடாமல் பார்த்துக்கொள்வதில் காட்டியிருந்தால் செய்திருந்தால் இப்படியான நிலைமைகள் வந்திருக்குமா?

அடுத்து நிர்வாகம் சம்பந்தப்பட்ட பல விமர்சனங்கள் இருந்தாலும் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் முன்னெடுக்கும் தமிழ்த் தேசியம் சார்பான பல நடவடிக்கைகளை நக்கல் நையாண்டி செய்வதே வாடிக்கையாகிப்போய்விட்டது.

இப்படியான அவசியமற்ற செயற்பாடுகளை அந்தந்த நேரம் கண்டித்து கூட்டமைப்பை தமிழ்த் தேசியம் சார்ந்து செயற்பட மக்கள் வலியுறுத்தியிருந்தால் மேற்படி காவடி சம்பவங்கள் தோன்ற சந்தர்ப்பம் இருந்திருக்காது.

இப்பொழுது கவலைப்படுவது வீண்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# நல்லிணக்கத்தை முன்னெடுப்பேன்

## ரணில் புத்தாண்டுச் சபதம்



கொழும்பு, ஏப்.19

நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை பலப்படுத்துகின்ற செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழ் - சிங்கள சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு அரச தலைவர்களின் சம்பிரதாயங்களில் ஒன்றான கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் வழிபடுவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் புதன்கிழமை காலை கண்டிக்கு விஜயம் மேற்கொண்டார்.

தலதா மாளிகையில் வழிபாட்டில் ஈடுபட்டதன் பின்னர், பௌத்த மக்களின் மதத் தலைவர்களான அஸ்கிரிய மற்றும் மல்வத்துப்பீட மகாநாயக்க தேரர்களை சந்திப்பதற்காக பிரதமர் சென்றார்.

இந்தச் சசந்திப்புக்களை நடத்திய பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

"புதுவருடத்தின் சம்பிரதாயங்களை நிறைவுசெய்து தலதா மாளிகைக்கு வந்து ஆசிர்வாதத்தைப் பெற்றுக்கொண்டேன். அதே போன்று மல்வத்த மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களைச் சந்தித்தும் ஆசிபெற்று கலந்துரையாடலையும் நடத்தினேன்.

இந்த நாட்டில் நல்லிணக்கம், சமாதானத்தை பலப்படுத்த செயற்பட வேண்டும். பழைய வருடத்தைப் போன்று துரதிர்ஷ்ட சம்பவங்கள் இல்லாமல் நாம் முன்நோக்கிப் பயணிக்க வேண்டும். ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டங்களில் இருந்து பலன்களைப் பெற்றுக்கொள்ளும் காலம் இது.

சில வேலைத்திட்டங்கள் நிறைவு செய்யப்படவுள்ளதோடு மேலும் சில திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதுதொடர்பில் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது. ஜனாதிபதி நாடு திரும்பியவுடன் புதிய திட்டத்தின் ஊடாக முன்செல்ல எதிர்பார்க்கின்றோம். கடந்த வருடத்தில் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தோம். குப்பை மேட்டுச் சரிவு, வெள்ளம், வறட்சி உள்ளிட்ட பிரச்சினைகள் ஏற்பட்டன. ஆயினும் சிங்கள தமிழ் புதுவருடப் பிறப்பு காலத்தில் மலிவு விலைகளில் பொருட்களை வழங்க முடிந்தது. இந்த வேலைத் திட்டங்களை நாங்கள் தொடர்ந்தும் முன்னெடுப்போம்" என்றார். (அ)

# அமைச்சுப் பதவியை நிராகரித்த விஜேதாச

கொழும்பு, ஏப்.19

உத்தேச அமைச்சரவை மாற்றத்தின் போது, ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் வெளிவிவகார அமைச்சராகப் பதவி ஏற்குமாறு முன்வைக்கப்பட்ட யோசனையை முன்னாள் அமைச்சர் விஜேதாச ராஜபக்ச நிராகரித்துள்ளார்.

தற்போது வெளிவிவகார அமைச்சராகப் பதவி வகிக்கும் திலக் மாரப்பன, அந்தப் பதவியில் இருந்து விலக இணக்கம் தெரிவிக்கவில்லை. அவ்வாறான பின்னணியில், வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்பதன் மூலம் கட்சிக்குள் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகக் கூறியே விஜேதாச ராஜபக்ச குறித்த யோசனையை நிராகரித்துள்ளார். அத்துடன் மீண்டும் நீதியமைச்சராக பதவியேற்க விரும்பவில்லை எனவும், அமைச்சுப் பதவியை விட 2015ஆம் ஆண்டு ஜனவரி மக்கள் வழங்கிய ஆணைக்கு அமைய செயற்பட்டு 64 இலட்சம் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற ஆதரவளிப்பதாகவும் விஜேதாச ராஜபக்ச கட்சியின் தலைமைக்கு அறிவித்துள்ளார். அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டும், கட்சியால் கைவிடப்பட்ட நிலையில் இருந்த போதிலும் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாகவும், அரசியல் பதவிகள் மற்றும் சிறப்புரிமைகளை விட கொள்கைகளை மதிப்பதே இதற்கு காரணம் எனவும் அவர் கூறியுள்ளார். எதிர் காலத்திலும் நல்லாட்சி மூலதர்மங்களை பாதுகாத்து, கட்சி மற்றும் மக்களுக்காக சேவையாற்ற சந்தர்ப்பம் கிடைத்தால், அந்த மூலதர்மங்களின் அடிப்படையிலேயே செயற்படப் போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஐ.தே.கவுக்கு 3 செயலாளர்கள்

## இன்று நியமிக்கப்படுவர்

கொழும்பு, ஏப்.19

இன்று கூடவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்புக் கூட்டத்தில் மூவர் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் தவிசாளர், பொருளாளர் பதவிக்கும் புதியவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்ட அரசியல் சபை கடந்த 11ஆம் திகதி அலரி மாளிகையில் முதன்முதலாகக் கூடியது. இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இன்று கூடவுள்ள மறுசீரமைப்புக் குழு கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகள் யாருக்கு செல்லப்போகின்றது பற்றி சில தகவல்கள் கசிந்துள்ளன. கட்சியின் தவிசாளராக இருந்த அமைச்சர் மலிக் சமரவிக்ரமவும், பொதுச் செயலாளராக இருந்த அமைச்சர் கபீர் ஹாசிமும், பொருளாளராக இருந்த எரான் விக்ரமரட்னவும் அண்மையில் தமது பதவிகளை இராஜினாமா செய்திருந்தார்கள்.

இதன்படி ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர், பொதுச் செயலாளர், பொருளாளர் ஆகிய முக்கிய பதவிகள் நிரப்பப்பட உள்ளன. மேலும், கட்சியின் பொதுச் செயலாளர் பதவியின் அதிகாரங்களை ஊடக செயலாளர், பிரசார செயலாளர் மற்றும் தொழிற்சங்க செயலாளர் என மூன்றாகப் பகிர்ந்து பதவிகளை உருவாக்குவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், செயலாளர் பதவிகளுக்கு மூவரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அகில விராஜ்காரியவசம், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் மற்றும் நவீன் திஸாநாயக்க ஆகியோரின் பெயர்களே பரிந்துரைக்கப்பட்டுள்ளன. (அ)

# களியாட்ட அரங்கு மருதனார்மடத்தில்!



யாழ்ப்பாணம், ஏப்.19

மருதனார்மடம் பகுதியில் சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு சிறுவர்களுக்காக அமைக்கப்பட்ட களியாட்ட அரங்கினை வலி.தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபைத்தலைவர் க.தர்ஷன் நாடாவை வெட்டி சம்பிரதாயபூர்வமாக நேற்று ஆரம்பித்து வைத்தார்.

தவிசாளருடன் வலி.தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபை உறுப்பினர் திருமுருகராஜன் மற்றும் பிரதேச மக்கள், சிறுவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

மேற்படி அரங்கில் செயற்கை நீச்சல்குளம், சிறுவர் விளையாட்டுத் திடல்கள், உணவகங்கள், பாதாளக் கிணற்றில் மோட்டார் சைக்கிள் ஓட்டும் சாகசம் எனப் பல அரங்குகள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இன்று நாளும் கோளும்

19.04.2018 வியாழக்கிழமை விளம்பி வருடம் சித்திரை மாதம் 06 ஆம் நாள்

சதுர்த்தி பி.ப. 01.33 வரை | ரோகிணி பி.ப. 01.02 வரை | குளிகை மு.ப. 09.00-10.30

இராகுகாலம் 01.30- 03.00 | சுபநேரம் காலை 10.30 - 11.30 | எமகண்டம் காலை 06.00 - 07.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உற்சாகம் | ஜெயம் | வரவு | நன்மை | செலவு | பயம் | பொறுமை | நற்செய்தி | பெருமை | ஆர்வம் | பாசம் | பாராட்டு |

### இலங்கைக்கு மீண்டும்

# ஜி.எஸ்.பி. வரிச்சலுகை



கொழும்பு, ஏப். 19

இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களுக்கு அமெரிக்காவால் வழங்கப்படுகின்ற ஜி.எஸ்.பி. வரிச் சலுகை எதிர்வரும் 22ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் எனக் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

"இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் நீடிக்கும் ஒப்பந்தத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் கையொப்பம் இட்டிருந்தார். அதன்படி இந்த வரிச்சலுகை நடைமுறைக்கு வரவுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவின் முன்னுரிமைப்படுத்தலுக்கான பொதுமைப்படுத்தப்பட்ட திட்டம் ஜி.எஸ்.பி வரிச்சலுகை ஆகும். இது 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதியுடன் காலாவதியாகியது. இந்த நிலையில், அதன் மீள்அங்கீகாரத்தை அமெரிக்கக் காங்கிரஸ் வழங்கவில்லை. இதன் விளைவாக ஜி.எஸ்.பி. வரிச்சலுகை கடந்த 2017ஆம் ஆண்டுடன் காலாவதியாகியது. இதனால், இலங்கை மற்றும் ஜி.எஸ்.பி. சலுகை பெறும் நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு மேற்கொள்ளப்படும் ஏற்றுமதிகளுக்கு ஜனவரி மாதம் முதல் அமுலுக்கு வரும் வகையில் முன்னுரிமையற்ற வரிகள் விதிக்கப்பட்டன.

எவ்வாறாயினும் மீண்டும் அந்த வரிச் சலுகையை வழங்குவதற்காக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அனுமதி வழங்கியுள்ளார்." என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஆ)

# மாகாணசபைத் தேர்தல் பழைய முறைக்குச் செல்லாது



கொழும்பு, ஏப். 19

மாகாணசபைத் தேர்தலை பழைய முறையிலோ அல்லது அதிக விமர்சனத்துக்குள்ளான விருப்பு வாக்கு முறையிலோ அரசாங்கம் நடத்தாது என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை பழைய முறையில் நடத்துவதற்கு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் சம்மதித்துள்ளார் என வெளியாகிய ஊடக அறிக்கைகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"இந்த முன்மொழிவுக்கு நானோ அல்லது ஜனாதிபதியோ சம்மதிக்கவில்லை. எனினும், 1988 ஆம் ஆண்டின் மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அரசு தயாராக உள்ளது. 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது, பழைய முறையிலான தேர்தல் திட்டத்தை ஒழிப்பதாக, அப்போதைய பொது வேட்பாளரும், தற்போதைய ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனா உறுதிமொழி வழங்கி இருந்தார். அதனால், அரசு பழைய முறைக்குச் செல்வதற்குத் தயாராக இல்லை.

சப்ரகமுவ, வட மத்திய, கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது தொடர்பாக ஆராய்வதற்காகப் புத்தாண்டுக்கு முன்னர், கட்சித் தலைவர்களைச் சந்தித்தேன். பழைய முறையில் தேர்தல்களை நடத்துமாறு, அங்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. ஆனால், கருத்தொருமைப்பாடு ஏதும் ஏற்படவில்லை.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட வட்டார முறையும் விகிதாசார முறையும் கலந்த முறையிலேயே, மாகாணசபைத் தேர்தல்கள் இடம்பெறும்.." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)



# மிகப்பெரிய சரக்கு விமானம்

மத்தள, ஏப். 19

உலகின் மிகப்பெரிய சரக்கு விமானமான Antonov An- 225 Mriya ரக விமானம் நேற்றுக் காலை 6.35 மணியளவில் மத்தள விமான நிலையத்தில் தரையிறங்கி உள்ளது.

ரஷ்யாவுக்குச் சொந்தமான இந்த விமானம், மலேசியாவில் இருந்து இங்கு வந்துள்ளது. இது மீண்டும் கராச்சி நோக்கி செல்ல உள்ளது.

24 பேரைக் கொண்ட நிர்வாகக் குழுவினருடன் வருகை தந்த குறித்த விமானம், எரிபொருளை நிரப்புவதற்கும், அதிகாரிகள் ஓய்வு எடுத்துக் கொள்வதற்காகவுமே மத்தள விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஆ)

## துப்பாக்கி முனையில் வங்கிக் கொள்ளை

கம்பஹா, ஏப். 19

கம்பஹா - சீதுவை நகரில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் நேற்றுக் காலை கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர் ஒருவர், துப்பாக்கி முனையில் கொள்ளையில் ஈடுபட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொள்ளையிடப்பட்ட பணத்தொகை இதுவரை மதிப்பிடப்படவில்லை என குறிப்பிடப்படுகின்றது. சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை. இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஆ)

# பிரத்தியேக வகுப்புகள்: ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை



கொழும்பு, ஏப். 19

பிரத்தியேக வகுப்புகளுக்கு வருமாறு மாணவர்களைப் பலவந்தமாக அழைக்கும் ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

பிரத்தியேக வகுப்புகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"விசேடமாக 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை நோக்காகக் கொண்டு நடத்தப்படும் பிரத்தியேக வகுப்புகளுக்கு மாணவர்களை வரவைப்பதற்காக பல ஆசிரியர்கள் அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றனர். இது தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால், கல்வி அமைச்சின் 1988 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகத் தொடர்பு கொண்டு இது தொடர்பான முறைபாடுகளைத் தெரிவிக்கலாம். கிடைக்கபெறும் முறைபாடுகளுக்கு அமைய உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)




# சுகாதாரத் துறைக்கு பில் கேட்ஸ் பாராட்டு

இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் முன்னேற்றகரமான ஆரம்ப சுகாதார சேவையைக் கட்டியெழுப்பி உள்ளன என உலக கோடீஸ்வரர்களில் ஒருவரும், 'பில் அன் மெலின்டா கேட்ஸ்' நிதியத்தின் இணை ஸ்தாபகருமான பில் கேட்ஸ் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்று உரையாற்றிய அவர், இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் ஆரம்ப சுகாதார சேவைப் பணியாளர்களாக பெண்கள் பணியாற்றுவதையும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஆ)



# 90,000 மெற்றிக் தொன் உப்பு உற்பத்தி

கொழும்பு, ஏப். 19

இந்த வருடத்தில் 90 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பு உற்பத்தியை எதிர்பார்ப்பதாக இலங்கை உப்புக் கம்பனியின் தலைவர் ஐயுப்கான் தெரிவித்துள்ளார்.

"நாட்டின் வருடாந்த உப்பு தேவை ஒரு லட்சத்து 20 ஆயிரம் மெற்றிக் தொன் ஆகும். இவற்றில் 70 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பைக் கம்பனி உற்பத்தி செய்கிறது. மேலும், 20 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பை தனியார் நிறுவனம் ஒன்று உற்பத்தி செய்கின்றது. எதிர்காலத்தில் உப்பு இறக்குமதியை நிறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)



அக்ஷய திருதியை தினம் நேற்று நாடளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் நகை வாங்கி அணிந்தால் செல்வம் அதிகரிக்கும் என்பது மக்களின் நம்பிக்கையாகும். இதனை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள நகைக்கடைகள் விழாக்கோலம் பூண்டன. அந்த வகையில் நெல்லியடி நகரப்பகுதியில் உள்ள நகைக் கடைகளில் பெருமளவான மக்கள் நகைகளைக் கொள்வனவு செய்தனர். அவற்றைப் படங்களில் காணலாம்.

(ஆ-11)

# சட்டவிரோதக் கடற்றொழிலால் முல்லை. மீனவர்கள் பாதிப்பு

முல்லைத்தீவு, ஏப். 19

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் சட்ட்விரோதக் கடற்றொழில் நடவடிக்கைகளால் தமது வாழ்வாதாரம் முழுமையாகப் பாதிக்கப்படுவதாக, அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின்கரையோரப் பகுதிகளில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த 250 இற்கும் மேற்பட்ட படகுகள் சட்டவிரோத மீன்பிடித் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றன. அத்துடன் உழவு இயந்திரங்களைப்பயன்படுத்தி கரைவலை இழுத்தல் மற்றும் தடை செய்யப்பட்ட தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளும் அதிகரித்து வருகின்றன.

கடந்த பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் மாவட்ட அரசாங்க அதிபர், வட மாகாண விவசாய மற்றும் கடற்றொழில் அமைச்சர், மாகாண சபை உறுப்பினர் ஆகியோரை உள்ளடக்கிய குழுவொன்றை நியமித்து இவ்வாறு சட்டவிரோத தொழில்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு வட மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த 2013ஆம் ஆண்டு வெளி மாவட்டங்களைச் சேர்ந்த 72 படகுகளுக்கு மாத்திரம் தொழிலுக்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.தற்போது 250 இற்கும் மேற்பட்ட படகுகள் சட்டவிரோதமான தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. குறிப்பாக, செம்மலை கிழக்கு, நாயாறு, வெலிஓயா போன்ற பகுதிகளிலும் அதிகளவான சட்டவிரோத தொழில்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# மாத்தறை கடலில் அபூர்வ உயிரினம்



மாத்தறை, ஏப். 19

மாத்தறை மிரிஸ்ஸ கடற்பரப்பில் அபூர்வமாக ஒட்டிப் பிறந்த கடலாமைக் குட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவை நேற்றுமுன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதுவரை ஒட்டிப் பிறந்த ஆமைகள் கண்டுபிடிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில். இந்தக் கடலாமைக் குட்டிகள் தற்போது கடலாமைகள் பாதுகாப்பு நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இவை சிறப்பான உடல் ஆரோக்கியத்தோடு உள்ளன என மிரிஸ்ஸ வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஆ)

# 100 அடி பள்ளத்தில் பாய்ந்து வான் விபத்து

## 2 பேர் படுகாயம்





லிந்துலை, ஏப். 19

லிந்துலை - தலவாக்கலை பிரதான வீதியில் வான் ஒன்று வீதியை விட்டு விலகி, 100 அடி பள்ளத்துக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானதில், அதில் பயணம் செய்த இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று மாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.


விபத்தில் படுகாயமடைந்த சாரதியும், மற்றையவரும் லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஆ)

# 48,000 ஏக்கரில் சிறுபோகம்

அம்பாறை, ஏப்.19

அம்பாறை மாவட்டத்தில் இந்த முறை 48 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அம்பாறை மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எம்.எஸ். ஏ.கலீஸ் தெரிவித்தார்.

“சிறுபோக நெற்செய்கைக்கான விதைப்பு வேலைகளை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யுமாறு விவசாயிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சேனா நாயக்க சமுத்திரத்தின் நீர்மட்டம், 26 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நெற்காணிகளுக்கு நீர்ப் பாசன வசதிகளை வழங்கப் போதுமானது. கடந்த வருடத்தை விட இந்த முறை குறைந்த நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.” என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)



# கை கொட்டிச் சிரிப்பார்கள், ஊரார் சிரிப்.........பார்கள்!

செய்ய வேண்டியதைச் செய்யாமை விட்டிட்டு இப்ப கத்திக் குளறிக் கூத்தாடுறதிலை ஒரு பிரியோசனமும் இல்லைத் தலைவா! எப்பிடியோ கௌதமன் தலைவரா வந்திட்டார். இனி வவுனியாவிலை சங்கரி – சுரேஸ் கூட்டணி மேலோங்கப் போகுது. இதுக்குப் புதுத் தேர்தல் கலப்பு முறைதான் காரணம் எ்ண்டு இப்ப கத்தி ஒண்டும் நடவாது. ஏற்றுக் கொள்வாய்? கூட்டிச் செல்வாய் தலைவா. ஏனெண்டால் அந்தத் தேர்தல் முறையைப் பாலிமென்டிலை கொண்டு வரேக்கை தலைவா நீயும், மாமாவும் அங்கைதானே இருந்தனீங்கள்? ஏதாவது எதிர்ப்புத் தெரிவிச்சனீங்களோ? ஒண்டும் பேசாமல் இருந்திட்டு இப்ப உங்களுக்கு நோகுது எண்டு கண்டவுடனை குத்தி முறியிறதாலை பயனில்லைத் தலைவா.

“இது தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பைத் தோற்கடிக்க வேண்டும் என்ற திடசங்கற்பத்துடன் ஏனைய கட்சிகள் திட்டமிட்டு ஒன்று சேர்ந்துள்ளமை தெளிவாகத் தெரிகிறது மக்களே” – எண்டு தலைவா நீ மூலம் தள்ளக் கத்திறது தெரியிது. என்ன செய்ய?

தலைவா நீ விட்ட பிழைதான் இதுக்கெல்லாம் காரணம் எண்டு நான் கத்தினா நீ கேக்கப் போறியோ? உனக்கு மனதுக்குச் சரி எண்டு பட்டதைத்தானே செய்யிறாய். சம்பந்தனையும் கையைப் பிடிச்சுக் கூட்டிக் கொண்டு போற விதமும் பிழை எண்டு பல தடவை கத்தின்னாங்கள். கேட்டனியே தலைவா? இப்ப கிடந்து கத்திப் பலனில்லை.

தலைவா நீ விட்ட அடுத்த பிழை, தமிழ் சனத்தைச் செம்மறியள் எண்டு நினைச்சது. செம்மறியள்தான் முன்னுக்குப் போறதைப் பாத்து ஏன்? ஏது? எண்டு கேளாமைப் பின்னாலை போறது. வெட்டக் கொண்டு போகேக்கையும் ஒண்டும் பேசாமல் இரைமீட்டபடி பின்னாலை போகும். ஏன் எண்டால் பாவம் அதுக்கு மூளை கிடையாது.

அடுத்த பிழை தலைவா நீ ஆரையும் மதிச்சதில்லை. உனக்கு நீ ஒரு அப்புக்காத்து என்ன வேணும் எண்டாலும் செய்ய முடியும் எண்ட இறுமாப்போடை நடந்து, விரும்பினால் போ எண்டு நாட்டாமைக் கதையும் கதைச்சபடியால் சாவகச்சேரியிலை தோத்தனியள் எல்லே. மிண்டு குடுத்து எழும்பி நிண்டு கொண்டு வீரம் கதைக்கிறது அவ்வளவு சரியில்லை.

தலைவர் பதவிக்கு ஆசைப்படுகிற நீ தம்பி, வவுனியாவிலை அண்டைக்கு நகரசபைப் பிரச்சினை வந்திட்டுது எண்டவுடனை பிரச்சினைக்கு முகங் குடுக்கேலாமை “காரிலை ஏறி ஓடிப்போனவர் சுமந்திரன்” எண்ட கறை படிஞ்ச வரலாற்றை எழுத வைச்சிட்டாயெல்லே? உது மட்டுமில்லை, எப்பிடியும் நாங்கள்தான் வெல்லுவம் எண்டு மாவையின்ரை “ஓவர் ஸ்மாட்” கதைக்கு எடுபட்டுத் தலைகீழா நடந்த விசியந்தான் இப்ப கொட்டிண்டு போய்க் கிடக்கிறியள்.

தோத்தவனை வெண்டவன் எண்ட போலி வரலாற்றை எழுத அரி ஓம் நம எண்டு பிள்ளையார் சுழி போட்டுத் துவக்கிவைச்சவர் நீங்கள். சாவகச் சேரியிலை குறைய சீற்றைப் பிடிச்ச நீங்கள் வெற்றி? ஆனால், கூடின சீற்றைப் பிடிச்ச கஜேந்திர குமார் தோல்வி? அப்ப முத்தோராகிய உங்கள் வழியே, அவர்கள் வழி?

இப்ப ஈழப்படலம் முதலாம் பாகம் தான் தலைவா ஆரம்பிச்சிருக்கு. அதிலை மயிரிழையிலை தப்பிப் பிழைச்சிருக்கிறியள். இரண்டாம் பாகம் என்ன படிப்பினையோ தெரியாது! அதுக்குப் பிறகு ஒரு மூண்டாம் பாகத்தை ஆரோ எழுதுவினம். அதிலை உங்கடை முகவரி இருக்குமோ தெரியாது! நாலாம் பாகத்திலை நீங்கள் சில நேரம் ஒரு துரோகியளாகக்கூட எழுதப்படுவியள். மிக்க கவனத்தோடை இருங்கோ எண்டுதானே விநாசி அண்ணை சொல்லவாறன். என்ன கோவமே?

கோபிக்காதை. சமூகத்துக்கு ஒரு நல்லவனா இரு எண்டுதானே சொல்லுறம். கோடாரிக் காம்பெண்டு கெட்ட பேரை எடுத்துப் போடாதை எண்டு தானே சொல்லுறம். மாவைக்கு நல்ல புத்தியைச் சொல்லு எண்டுதானே சொல்லுறம். என்ன கெட்டுப் போகவா சொல்லுறம்? பாய்..பாய்...!!

- வில்லங்கம் விநாசி

# தொடர்ச்சிகள்

## நாடு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், எம்.பியுமான சுமந்திரன் தெரிவித்திருந்தார். இதற்குப் பதில் அறிக்கை வெளியிட்ட முதலமைச்சர் விக்னேஸ்வரன், "நான் அரசியலில் தொடர்ந்து ஈடுபட வேண்டுமென மக்கள் விரும்புகின்றனர். ஆனால் அது புதிய கட்சியா, புதிய கூட்டணியா என்பது பற்றித்தான் முடிவெடுக்க வேண்டும்" எனக் கூறியிருந்தார்.

தற்போது இந்தியாவில் தங்கியிருக்கும் முதலமைச்சர் அங்கு இரகசியமான சில அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இதனாலேயே இந்தியப் பயண விபரமெதையும் வெளியிடாமல் முதலமைச்சர் தரப்பு மௌனம் காத்து வருகின்றது. இந்தியாவில் பெறப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் நாடு திரும்பியதும், அடுத்த தேர்தலுக்கான வியூகங்களை முதலமைச்சர் விக்னேஸ்வரன் வகுக்கவுள்ளார்.

அதன் முதற்கட்டமாக, புதிய கூட்டணி பற்றிய அறிவிப்பை அவர் வெளியிடவுள்ளார். தனிக்கட்சி தொடங்குவது உடனடிச் சாத்தியமில்லாத விடயம் என்பதால், பொதுக் கூட்டணி ஒன்றிலேயே அவர் போட்டியிடவுள்ளார்.

தமிழ்த் தேசியத்தின் மீதும், மக்கள் நலன் மீதும் அக்கறை கொண்ட அனைவரும் இந்தக் கூட்டணியில் இணைய முதலமைச்சர் விக்னேஸ்வரன் அழைப்பு விடுப்பார் எனவும், அதில் இணைய வரும் சகலரையும் இணைத்து, கூட்டமைப்புக்கு சவால் விடுக்கக்கூடிய வகையிலான பலத்துடன் களமிறங்கவுள்ளார் என்றும் தெரிய வருகின்றது. (அ)

## சுமந்திரனே... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறாக ஈ.பி.ஆர்.எல்.எப், கூட்டமைப்பைக் கவிழ்த்திருந்தது. இதனையடுத்து, "எமக்கு எதிரான சதியை நேரில் பார்க்கவே சென்றேன்" என கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன், ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியைச் சாடியிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையிலே சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவடைந்து மிக நீண்ட நாட்களின் பின்னர் தான் சபைகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந்தச் சபைகள் அமைப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது வேறேதும் கட்சிகளோ எங்களுடன் பேச்சு வார்த்தை எதனையும் நடத்தவில்லை. வடக்கு கிழக்கு முழுவதும் எங்களுக்கு ஆசனங்கள் இருக்கின்றன.

அவ்வாறிருக்கையில் சபைகளை அமைப்பதற்கு பல பேருக்கு எங்களது ஆதரவு தேவையாக இருந்தது. ஆனால் அவர்கள் யாரும் சபைகளை அமைப்பது தொடர்பாக எங்களுடன் பேசியிருக்கவும் இல்லை. அவ்வாறு பேசுவதற்கு தயாராகவும் அவர்கள் இல்லை. ஏறத்தாழ ஒன்றரை மாதத்துக்கு முன்னரே இது குறித்து கூட்டமைப்பு உட்பட எவரும் எங்களுடன் பேச வேண்டுமானால் அவ்வாறு பேசுவதற்கு தயாராக இருக்கிறோம் என்று எமது கட்சிச் செயலாளர் அறிவித்திருந்தார்.

ஆனால் அவ்வாறான பேச்சுவார்த்தைக்கு யாரும் முன்வரவில்லை. அவ்வாறான சூழ்நிலையில் நாங்கள் ஒரு பொதுவானதொரு நிலைப்பாட்டை எடுத்திருந்தோம். அதன் பிரகாரமே யாழ்.மாவட்டத்திலும் கிளிநொச்சியிலும் யாருக்கும் ஆதரவு இல்லாத நடுநிலையை வகித்திருந்தோம். இறுதியாக நடைபெற்ற வவுனியா நகர சபையில் நடந்த தேர்தலில் முக்கியமாக முஸ்லிம் தரப்பினர்கள் அல்லது ஆளுந்தரப்பினர்கள் வந்துவிடுவார்கள் என்ற காரணத்தினால் சிவில் சமூகத்தினால் எங்களுக்கு பல வித அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அவ்வளவு நடந்தும் கூட கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழரசுக்கட்சியினர் அல்லது கூட்டமைப்பு என்ற பெயரில் இருக்கக் கூடியவர்கள் எம்முடன் இதுபற்றி கலந்தாலோசிக்கவில்லை. ஆனால் என்னுடன் சிவாஜிலிங்கம் பேசியிருந்தார். ஆனால் கூட்டமைப்பு சார்பாக அவரது பேச்சுக்கள் இருந்ததாக நான் நம்பவில்லை. ஏனெனில் அவருடைய கருத்து ரெலோவின் கருத்து என்று மாவை சேனாதிராசாவும் ஏற்கனவே கூறியிருந்தார்.

அந்த வகையில் வவுனியா கூட்டத்திலும் கூட நாங்கள் நடுநிலை வகிப்பதாகத் தான் இருந்தது. ஆனால் அங்கு நிலைமைகளைப் பார்த்த போது தமிழரசுக் கட்சியினர் தோல்வியடைந்து ஆளும்கட்சியினர் வெல்லக் கூடிய சூழலே அங்கிருந்தது. அவ்வாறான சூழலில் நாங்கள் 3 பேர் தான் இருந்தாலும் கூட போட்டியிட வேண்டியதொரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அந்த நிர்ப்பந்தம் எமக்கு சிவில் சமூகத்தாலும் பொது மக்களாலும் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் நாங்கள் போட்டி போட்டோம். எமது கொள்கையின் பிரகாரம் நாங்கள் கூட்டமைப்புக்கு வாக்களிக்க முடியாது. அதே போன்று வேறு எவருக்கும் வாக்களிக்க முடியாது. அந்த வகையில் போட்டி போட்டதில் நாம் நியமித்த வேட்பாளர் ஏதோவொரு வகையில் வெற்றி பெற்றிருக்கின்றார். ஆகவே இது எந்தவிதமான சதியும் அல்ல.

அத்துடன் சதியைப்பற்றி பேசுவதற்கு சுமந்திரனுக்கு எந்தவிதமான யோக்கியமும் கிடையாது. அவர் நாடாளுமன்றுக்கு போனதில் இருந்து இன்றுவரை பல்வேறு பட்ட பெரும் சதிகளை நடத்தியிருக்கின்றார். சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை நகர சபை உட்பட பல சபைகளில் பெரும்பான்மை இல்லாத போதும் கூட ஏனையோரின் ஆதரவைப் பெற்று அங்கே ஆட்சியமைத்திருக்கின்றார்.

ஆகவே அவ்வாறான சூழ்நிலையில் சதியைச் செய்பவரே சதியை நேரே பார்த்தேன் என்று கூறுவது எந்த விதமான அர்த்தமும் இல்லாத விடயம். அது மாத்திரமல்லாமல் எல்லா இடங்களிலும் தாங்கள் ஆட்சியமைக்க விரும்புவதும் அவ்வாறு தாங்கள் ஆட்சியமைக்கா விட்டால் அது சதி என்று முத்திரை குத்தவதும் சதி செய்பவர்களின் இயல்பே தவிர வேறொன்றுமில்லை" என்று அவர் தெரிவித்தார். (அ)

## மே 18... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டவர்களாக நாகரீகமாகத் தம்மை அடையாளப் படுத்திக்கொள்ளும் உலக சமூகங்களின் மனச்சாட்சிக் கதவுகளை இறுக்கி மூடி வைத்தபடி, அவசர அவசரமாக இருபத்தோராம் நூற்றாண்டில் எல்லோர் முன்னிலையிலும் நடந்தேறிய, மறைக்கவும், மறக்கவும் முடியாத, மிகவும் கோரமாக நடத்தி முடிக்கப்பட்ட தமிழர்களுக்கெதிரான மாபெரும் மனிதப்பேரவலம்தான் மே18 முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை!

இப்பேரவலத்தை நாம் எல்லோரும் தமிழர்களாக, வரலாற்று வழித்தடத்தில் சுமந்துவந்த அத்தனை அறவழி முறைகளிலிருந்தும் வழித்தடம் மாறாமல், உலகின் முன்னால் நிமிர்ந்து நின்று நீதி கேட்கும் அத்தனை உரிமைகளும் தமிழர்களாகிய எமக்குண்டு.

நாங்கள் நாங்களாக- தமிழர்களாக -இருக்கும் வரையில்தான் எமது இனவிடுதலையின் பயணம் வீறுகொண்டெழும், வியாபகம் பெறும். இல்லையேல் கால ஓட்டத்தில் வழித்தடம் மாறி, யார் யாரெல்லாம் எம்மை அழிக்க நினைத்தார்களோ அவர்களின் பாதையில் பங்காளிகளாகவும் கூட மாறநேரிடும்.

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவுதினமென்பது தமிழர்களின் ஒட்டுமொத்த துயரங்களாலும், தோல்விகளாலும் துவண்டுபோகும் நிகழ்வல்ல..! மாறாக தமிழர்களின் மீளெழுச்சியைக் கட்டியங்கூறி நிற்கும் தார்மீக வடிவமாக, காலம்காலமாகத் தொடர்ந்து வரும் அத்தனை வரலாற்றின் அடையாளங்களோடும் தமிழ்த்தேசியம் புத்துயிர்பெறுகின்ற பேரெழுச்சி நிகழ்வாக அமையவேண்டும்!

எம் தாய் நிலத்திலாயினும், புலம்பெயர்ந்த தேசங்களலாயினும், தமிழ்த்தேசியம் நோக்கிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் தமிழர் அமைப்புக்கள் தங்களது செயற்பாடுகளுக்கேற்ப முள்ளிவாய்க்கால் நினைவுதினம் போன்ற தமிழ்த்தேசிய நினைவெழுச்சி நிகழ்வினை அதன் அடையாளங்களிலிருந்தும் வேறுபடுத்துகின்ற பிரத்தியேக நிகழ்வாக ஒருபோதும் கடைப்பிடிக்க முடியாது . இதனை ஒன்றாக ஓரிடத்தில் அந்தந்த நாடுகள் தழுவி தமிழர்களின் ஒட்டுமொத்த தமிழ்த்தேசிய மக்கள் பேரெழுச்சியாக எழுச்சிகொள்ள வேண்டும் எனும் தமிழ்மக்களின் பார்வையும், அவர்களது அபிலாசையும் புறக்கணிக்க முடியாத சூழமைவாக மிகவும் வலுப்பெற்றுள்ளது.

இவ் விடயத்தினைப் பெரிதும் கருத்திற்கொண்டு இது பற்றிய நேரடியான, நேர்மையான, ஆக்கபூர்வமான கலந்தாலோசனைகளோடு, இதனைச் செயற்படுத்த முனையுமாறு தமிழர்களின் விடுதலை நோக்கிய பயணத்தில் தம்மை ஈடுபடுத்தியிருக்கும் அனைத்து அரசியல் மற்றும் பொது அமைப்புக்களிடமும், எம்மினத்தின் எதிர்காலத் தூண்களான இளைய மாணவ சமுதாயம் அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றது.

இதில் அனைத்துத் தமிழ்மக்களினதும், தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற தமிழர் அமைப்புக்களினதும் பூரண ஒத்துழைப்பினை தமிழ் மாணவர்களான நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம். தமிழ்த்தேசியத்தின் எதிர்காலத்தை இன்றைய இருள்சூழ்ந்த நிலையிலிருந்து விடிவை நோக்கி மாற்றியமைக்கும் தொடக்கப்புள்ளியாக முள்ளிவாய்க்கால் மண்மீது உறுதியெடுப்போம்" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## புகார்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்படி முறைப்பாடு செய்தால் எங்கள் மகனைக் கனடாப் பொலிஸார் பிடித்து நாட்டுக்கு அனுப்பிவிடுவார்கள் என்ற அச்சமும் ஒரு காரணம்" என்று தெரிவித்துள்ளார் கனடாவில் 'மர்மக் கொலைகாரனால் 'கொல்லப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கிருஷ்ணகுமார் கனகரட்ணத்தின் தாயார்.

பலரைக் கொன்று அவர்களின் உடல்களை புதைத்து வைத்திருந்த 'மர்மக் கொலைகாரன்' , யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கிருஷ்ணகுமாரையும் கொன்ற விடயம் உறுதியாகியுள்ளது. அவர் 2015 ஆம் ஆண்டு கொல்லப்பட்டுள்ளார். எனினும் அது குறித்து அவரின் உறவினர்கள் ஏன் முறையிடவில்லை என்று கேள்வி எழுந்தது. இதற்குப் பதிலளிக்கையிலேயே கொல்லப்பட்ட இளைஞரின் தாயார் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

"அவருக்கு என்ன நடந்ததென நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஏன் அவர் கொலை செய்யப்பட்டார்? எப்போது அவர் கொலை செய்யப்பட்டார்? என்பது தொடர்பான தகவல்கள் எங்களுக்கு வேண்டும். கனேடிய அரசாங்கம் அவரது அகதி விண்ணப்பத்தை நிராகரித்த பின்னர் அவர் மறைந்திருப்பதாக நினைத்ததால் அவரை காணவில்லை என முறைப்பாடு செய்யவில்லை. கடந்த 2015ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இறுதியாக அவர் டொரொன்டோவில் இருந்து பேசினார். தினமும் தொலைபேசி அழைப்பை மேற்கொள்ளும் அவர், அழைப்பேற்படுத்துவதனை நிறுத்திய பின்னர் அவரது தொலைபேசி இயங்காமல் போனது. அதன் பின்னர் நாம் மிகவும் வருத்தம் அடைந்தோம். தெரிந்த அனைவருடாகவும் அவரைத் தொடர்பு கொள்ள முயற்சித்தோம். எனினும் முடியவில்லை. என்ன செய்வதென்றே எங்களுக்குத் தெரியாமல் போனது. கனடா அரசாங்கத்திடம் சிக்கி மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவார் என எண்ணினோம் அதனாலேயே முறைப்பாடு செய்யவில்லை" என்று அவர் தெரிவித்தார். (அ)

## பாண்டியன்குளம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்களைப் பிரேரித்தன.

இதன்போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பில் தவிசாளராக போட்டியிட்ட மகாலிங்கம் தயானந்தன் 07 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார்.

இவருக்கு ஆதரவாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் 4 வாக்குகளும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 2 வாக்குகளும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஒரு வாக்கும் கிடைக்கப் பெற்றன.

இவரை எதிர்த்துப் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சி.செந்தூரன் 6 வாக்குகளையே பெற்றார்.

அவருக்கு கூட்டமைப்பின் 06 வாக்குகள் மாத்திரமே கிடைத்தன.

இந்த சபையில் பிரதித் தவிசாளராக போட்டியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஆர்.சிந்துஜன் 7 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சி.ராஜேஸ்வரி 6 வாக்குகளை மாத்திரமே பெற்றுக்கொண்டார்.

13 உறுப்பினர்களைக் கொண்ட மாந்தை கிழக்கு பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 6 உறுப்பினர்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 4 உறுப்பினர்களையும், ஈ,பி.டி.பி ஒரு உறுப்பினரையும், சுதந்திரக்கட்சி இரண்டு உறுப்பினர்களையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## முதலமைச்சருடன்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சி இணையும்" என அந்தக் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

"தமிழரசுக் கட்சியும் கூட்டமைப்பும் மக்கள் கொடுத்த ஆணையிலிருந்து விலகிச் சென்றிருக்கின்றன. அதன் காரணமாக கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அவர்கள் பலத்த அடி வாங்கியிருக்கின்றனர். பல ஆயிரக் கணக்கான வாக்குகளை அவர்கள் இழந்தும் இருக்கின்றார்கள்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் தமிழ் மக்கள் நீண்டகாலப் போராட்டத்தின் பின்னர் தமது உரிமைகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் அவர்களது உரிமைகளை அபிலாஷைகளை சரியான முறையில் முன்னெடுத்துச் செல்ல அந்தக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய நம்பகத் தன்மை வாய்ந்த கட்சியொன்று முக்கியம். அந்த அடிப்படையில் முதலமைச்சர் புதிய கட்சியொன்றைத் தொடங்க இருக்கிறாரா அல்லது கொள்கையை ஏற்றுக் கொண்ட புதிய கூட்டணி ஒன்றை உருவாக்க விரும்புகிறாரா என்பது தெளிவில்லாத சூழ்நிலை உள்ளது.

அவ்வாறு சரியானதொரு கூட்டணி உருவாகும் பட்சத்தில், அதற்கான யாப்பு சரியான கொள்கை திட்டமிடல்கள் இவை எல்லாம் சரியான முறையில் உருவாகும் பட்சத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப், முதலமைச்சருடன் இணைந்து செயற்படத் தயாராக இருக்கின்றது" என்று அவர் தெரிவித்தார். (அ)

## மாநகர... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிகளை மேற்கொள்வதற்கு வேண்டிய அனைத்து வேலைத் திட்டங்களுக்கும் மத்திய அரசின் உதவியினைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தயாராக இருப்பதாகவும், தேவை ஏற்படின் கோரிக்கையினை முன்வைக்குமாறும் மாநகர முதல்வர் ஆர்னோல்டை, ஆளுநர் .கேட்டுக் கொண்டார். (அ)

## அரசைக்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து வெளியிட்டு வருகின்றனர். எனினும் அதுவரை காத்திருக்காது மக்களுக்காக தற்போதைய அரசாங்கத்தைக் கவிழ்க்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி என்பன கொண்டு வரும் யோசனைகள் குறித்து கவனமாக செயற்பட வேண்டும்" எனவும் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார். (அ)

## சரா எம்.பிக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவாளரான சுழிபுரம் பாணாவெட்டியைச் சேர்ந்த வைரவன் சபாரத்தினம்(ராசா) (வயது -54) என்பவர் தன் கையை பிளேட்டால் அறுத்து, அந்த இரத்தத்தை எடுத்து வீரத்திலகமிட்டிருந்தார்.

அந்த ஆதரவாளர் மூன்று நாட்களுக்கு முன்னர் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துள்ளார். (அ)



## ஜோர்ஜ் புஷ்சின் மனைவி மரணம்

வொஷிங்டன், ஏப்.19

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் எச்.டபுல்யூ. புஷ்சின் மனைவி பார்பரா புஷ் தனது 92 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

பார்பராவின் உடல் நலம் பாதிப்பு அடைந்துள்ளதாக ஹூஸ்டனில் உள்ள முன்னாள் ஜனாதிபதி அலுவலகம் அறிக்கை வெளியிட்டது. இந்த நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என குடும்பச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (ஆ)

## பெண் நிருபர் கன்னத்தை தட்டிய தமிழக ஆளுநர்!



ஆளுநர் மாளிகையில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின்போது பெண் நிருபர் ஒருவரின் கன்னத்தை, ஆளுநர் பன்வாரிலால் புரோகித் தட்டியமை சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

ஆளுநர் பன்வாரிலால் புரோகித் பத்திரிகையாளர்களைச் சந்தித்த பிறகு, அவரிடம் வாரப் பத்திரிகை ஒன்றின் மூத்த நிருபர் உட்பட பெண் நிருபர்கள் சில கேள்விகளைக் கேட்க முயன்றனர். அப்போது, ஆளுநர் அந்த கேள்விகளுக்கு பதில் அளிக்காமல், அங்கு நின்றிருந்த மூத்த பெண் நிருபரின் கன்னத்தைக் கையால் தட்டிவிட்டு சிரித்தபடி சென்றார்.

இந்தச் சம்பவத்துக்குப் பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

'ஆளுநர் தன்னைத் தாத்தாவாக நினைத்து என் கன்னத்தைத் தட்டி இருக்கலாம். ஆனால், நான் இதை ஏற்கவில்லை. என் முகத்தை நான் பல முறை கழுவினால் கூட இந்தத் தாக்கத்தில் இருந்து என்னால் மீள முடியவில்லை' என்று அந்த பெண் நிருபர் தெரிவித்துள்ளார். (ஆ)

## ஆப்கானில் வேட்டு: 6 பொதுமக்கள் பலி

காபூல், ஏப்.19

ஆப்கானிஸ்தானின் மேற்கு கோர் மாகாணத்தில் துப்பாக்கி ஏந்திய பயங்கரவாதிகள் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் 6 பொதுமக்கள் பலியாகியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் துப்பாக்கியுடன் வந்த பயங்கரவாதிகள் அங்கிருந்த கார் ஒன்றை நோக்கிச் சுட்டுத்தள்ளியுள்ளனர். இதில், 6 பேர் பலியாகினர். 4 பேர் படுகாயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும், இந்தத் தாக்குதலுக்கு எந்த தீவிரவாத இயக்கமும் இதுவரை பொறுப்பேற்கவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஆ)

## ம.பியில் விபத்து: 15 பேர் உயிரிழப்பு



போபால், ஏப்.19

மத்திய பிரதேச மாநிலம் சித்தி பிரதேசத்தில் ஆற்றுக்குள் பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 15 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 14 பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்தில் திருமண வீடு ஒன்றுக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்தவர்களே உயிரிழந்தனர்.

சோனே எனும் ஆற்றுப்பகுதியில் பஸ் சென்று கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து ஆற்றுக்குள் கவிழ்ந்துள்ளது.

இதை அடுத்து, தீயணைப்புத் துறையினர் மற்றும் பொலிஸார் அந்தப் பகுதிக்கு விரைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஆ)



### இரசாயனத் தாக்குதல்:

## டூமா நகரில் நேற்று நிபுணர்கள் ஆய்வு

டமாஸ்காஸ், ஏப். 19

இரசாயன ஆயுதத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் சிரியாவின் டூமா நகரில், சர்வதேச நிபுணர்கள் நேற்று புதன்கிழமை ஆய்வுகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு சிரியாவும், அதன் நட்பு நாடான ரஷ்யாவும் ஒப்புதல் அளித்துள்ளன.

சிரியாவில் நடந்து வரும் உள்நாட்டுப் போரில், ஜனாதிபதி பஷார் அல் அசாத்தின் அரச படையினர், தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டு சர்வதேச அளவில் எழுந்துள்ளது.

இந்த நிலையில், கிழக்குக் கூட்டாப் பகுதியில் கிளர்ச்சியாளர்கள் பிடியில் உள்ள கடைசி நகரமான டூமாவில் கடந்த 7 ஆம் திகதி இரசாயன ஆயுதத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் அப்பாவிப் மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

இந்த இரசாயன ஆயுதத் தாக்குதலுக்கு சிரியாவில் உள்ள பஷார் அல் அசாத் அரசும், ரஷ்யாவும்தான் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று அமெரிக்கா கூறியது. ஆனால், அந்த 2 நாடுகளும் இதை ஏற்க மறுத்தன. அத்துடன் இரசாயன ஆயுதத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறியது நாடகம் என அவை தெரிவித்தன. ஆனால், சிரியாவில் நடந்த இரசாயன ஆயுதத் தாக்குதலுக்கு பதிலடியாக, அந்த நாட்டின் மீது கடந்த 14ஆம் திகதி அமெரிக்கக் கூட்டுப் படைகள் ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தின.

இதற்கு இடையே, சிரியாவில் இரசாயன ஆயுதத் தாக்குதல் நடந்த டூமா நகரில் ஆய்வு நடத்துவதற்காக ஓ.பி.சி.டபிள்யு என்னும் சர்வதேச இரசாயன ஆயுதக் கண்காணிப்பு அமைப்பின் நிபுணர்கள், டமாஸ்கஸ் நகருக்கு கடந்த 14 ஆம் திகதி சென்றனர். ஆனால், அவர்களை டூமா நகருக்கு செல்வதற்கு, ரஷ்யாவும், சிரியாவும் அனுமதி அளிக்கவில்லை எனத் தகவல்கள் வெளியாகின. இதில் திடீர் திருப்பம் ஏற்பட்டது. சர்வதேச இரசாயன ஆயுதக் கண்காணிப்பு அமைப்பின் நிபுணர்கள், டூமா நகரில் ஆய்வு நடத்துவதற்கு சிரியாவும், ரஷ்யாவும் இப்போது ஒப்புதல் அளித்துள்ளன.

இதை அடுத்து, இரசாயன ஆயுதத் தாக்குதல் நடைபெற்று 11 நாட்கள் ஆன நிலையில் அங்கு சென்ற நிபுணர்கள், தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியில் மண் உள்ளிட்ட பல்வேறு தடயங்களைச் சேகரித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஆ)

## மியான்மாரில் பொதுமன்னிப்பு

மியான்மார், ஏப்.19

மியான்மார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 8 ஆயிரத்து 500 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவதாக அந்த நாட்டு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

ஆங் சான் சூகியின் நெருங்கிய உதவியாளராக இருந்து, அந்த நாட்டின் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற டின் க்யாவ் (வயது-71), உடல் நலக் குறைவு காரணமாக கடந்த மாதம் தனது பதவியை ராஜிநாமா செய்தார்.

இதை அடுத்து, மியான்மாரின் புதிய ஜனாதிபதியாக, ஆங் சான் சூகியின் தீவிர ஆதரவாளர் வின் மியிந்த் (வயது-66) பொறுப்பேற்றார். அவர் பொறுப்பேற்று ஒரு மாதத்துக்குள்ளாகவே இந்த முடிவு எடுக்கப்படுள்ளது.

பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட கைதிகளில் 36 பேர் அரசியல் வழக்குகளில் சிக்கி சிறையில்இருப்பவர்கள். போதை மருந்து கடத்தல் குற்றங்களில் ஈடுபட்டோருக்கும், வெளிநாட்டினர் 50 பேருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மியான்மாரில் கடந்த 50 ஆண்டுகளாக இராணுவ ஆட்சி நடைபெற்றது. நீண்ட போராட்டத்துக்குப் பிறகு, கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆங் சான் சூகியின் தேசிய ஜனநாயகக் கட்சி அபார வெற்றி பெற்றது. அவரது கட்சி ஆட்சிக்கு வந்ததில் இருந்து, இராணுவ ஆட்சியின்போது சிறையில் அடைக்கப்பட்ட கைதிகள் ஏராளமானோரை அவ்வப்போது விடுதலை செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஆ)

## நுரையீரல் புற்று நோயாளிகளுக்கு புதிய சிகிச்சை

நியூயோர்க், ஏப்.19

உலகம் முழுவதும் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ள நுரையீரல் புற்றுநோயாளிகளின் வாழ்நாட்களைப் புதிய சிகிச்சை முறை மூலம் நீடிக்க வைக்க முடியும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

புற்றுநோய் முழுவதும்குணப்படுத்த முடியாத ஒரு கொடூர நோயாகக் கருதுப்படுகிறது. குறிப்பாக பெரும்பாலானோர் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். மாசடைந்த காற்றை சுவாசிப்பதன் மூலமாக இந்தப் புற்றுநோய் ஏற்படுகிறது.

அறுவை சிகிச்சை, கதிரியக்க சிகிச்சை, மற்றும் கீமோ தெரபி மூலமாக நுரையீரல் புற்றுநோய் கட்டுப்படுத்தப்படுகிறது. கீமோ தெரபி முறையில் பொதுவாக மருந்துகளை வாய் மூலமாகவோ, ஊசிகளின் மூலமாகவோ உடலுக்கு உட்செலுத்தி, புற்றுநோயைக் கட்டுப்படுத்திக் குணப்படுத்த முயல்வர். கீமோ தெரபி நோயின் தன்மைக்கேற்ப மாறுபடும். ஆனால், இந்த முறையில் நோய் முழுமையாகக் குணமடையாது.

இந்த நிலையில், கீமோ தெரபியுடன் இம்யுனோ தெரபியையும் இணைத்துச் சிகிச்சை அளித்தால் புற்றுநோயாளிகளின் வாழ்நாளை அதிகரிக்க முடியும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சிகிச்சை முறை 616 நோயாளிகளிடம் பரிசோதனை செய்யப்பட்டு, இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உலகில் உள்ள நுரையீரல் புற்றுநோயாளிகள் அதிக அளவில் பயன்பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஆ)

எதிரொலி
Ethiroli

வியாழன் 19 ஏப்ரல் 2018

# ராணா மீண்டும் கலக்கல் ராஜஸ்தான் சொதப்பல்

ஜெய்ப்பூர், ஏப்.19

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் ஹட்ரிக் வெற்றிக் கனவை மிகச் சாதாரணமாகத் தகர்த்தெறிந்தது கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி.

ஜெய்ப்பூரில் உள்ள சவாய் மான்சிங் மைதானத்தில் ரகானே தலைமையிலான ராஜஸ்தான் ரோயல்ஸ் - தினேஷ் கார்த்திக் தலைமையிலான கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி பந்து வீச்சைத் தேர்வு செய்தது. ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ரகானேவும், ஷோர்ட்டும் களமிறங்கினர். இந்த ஜோடி அதிரடியாக ஆடியதால் ராஜஸ்தான் அணி விரைவில் அரைச் சதம் கடந்தது. ரகானே 19 பந்தில் ஒரு சிக்ஸர், 5 ப்வுண்டரியுடன் 36 ஓட்டங்கள் எடுத்து அவுட்டானார். அடுத்து இறங்கிய சஞ்சு சாம்சன் 7 ஓட்டங்களில் வெளியேறி அதிர்ச்சி அளித்தார்.

பொறுப்புடன் ஆடிய ஷோர்ட்டை நிதிஷ் ராணா வெளியேற்றினார். ஷோர்ட் ஒரு சிக்ஸர், 5 பவுண்டரியுடன் 44 ஓட்டங்கள் எடுத்து வீழ்ந்தார். அதன் பின்னர் வந்த வீரர்கள் பொறுப்புடன் விளையாடாததால், ராஜஸ்தான் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட் இழப்புக்கு 160 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது. திரிபாதி 15, ஸ்டோக்ஸ் 14, கௌதம் 12, கோபால் 0, குல்கர்னி 3 ஓட்டங்களை எடுத்தனர். ஆயினும் ஜோஸ் பட்லர் 24 ஓட்டங்களுடன் கடைசிவரை ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார். கொல்கத்தா அணி சார்பில் நிதிஷ் ராணா, டொம் கர்ரன் ஆகியோர் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.




மிக இலகுவான இலக்கை விரட்டிய கொல்கத்தா அணிக்கு கிறிஸ் லினும், சுனில் நரேனும் தொடக்க வீரர்களாக இறங்கினர். ஆனால் கிறிஸ் லின் ஓட்ட மெதுவும் பெறாமல் போல்டானார். ஆனால் சுனில் காட்டுத்தனமான ஓட்டக்குவிப்பில் இறங்க, அவருக்குப் போட்டியாக மறுமுனையில் உத்தப்பாவும் பந்துகளைப் பிளந்து கட்டினார். ஆயினும் 35 ஓட்டங்கள் எடுத்திருந்த போது சுனில் நரேன் ரன் அவுட் ஆனார். அவரைத் தொடர்ந்து உத்தப்பாவும் 48 ஓட்டங்களோடு வெளியேறினார். அதன் பின்னர் இளம்புயல் ராணாவும், அணித்தலைவர் டினேஸ் கார்த்திக்கும் பிரிக்கமுடியாத கூட்டணி அமைத்து வெற்றியைத் தொட்டனர். 18.5 ஆவது ஓவரில் சிக்ஸர் அடித்து ஆட்டத்தை முடித்து வைத்தார் கார்த்திக். ராணா 35 ஓட்டங்களோடும் கார்த்திக் 42 ஓட்டங்களோடும் ஆட்டமிழக்காது இருந்தனர். ராஜஸ்தான் அணியின் கௌதம் 2 விக்கெட்டுகளை கைப்பற்றியிருந்தார். நேற்றைய போட்டியிலும் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தி, 35 ஓட்டங்களைக் குவித்த ராணா ஆட்ட நாயகன் விருது பெற்றார். (அ)



# மரதன் சம்பியன்கள்

பொஸ்டன், ஏப்.19

பொஸ்டன் மரதனில், பெண்களில் ஐக்கிய அமெரிக்காவின் டெசிறி லின்டனும் ஆண்களில் ஜப்பானின் யுகி கவாயுச்சியும் வென்றனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த மரதனோட்டப் போட்டியில், 34 வய்தான டெசிறி லின்டன், ஈரமான வானிலையில், இரண்டு மணித்தியாலங்கள் 39 நிமிடங்கள் 54 செக்கன்களில் போட்டித் தூரத்தை கடந்து முதலிடம் பெற்றிருந்தார்.

இதேவேளை, யுகி கவாயுச்சி, இரண்டு மணித்தியாலங்கள் 15 நிமிடங்கள் 58 செக்கன்களில் போட்டித் தூரத்தைக் கடந்து முதலிடம் பெற்றிருந்தார். (அ)

# ரஸலுக்கு வாய்ப்பு



ஜமைக்கா, ஏப்.19

மேற்கிந்தியத் தீவுகளில், இர்மா, மரியா சூறாவளிகளால் பாதிக்கப்பட்ட கிரிக்கெட் மைதானங்களைப் புனரமைப்பதற்கான நிதி சேகரிப்புக்கான உலகப் பதினொருவர் அணிக்கெதிரான ரி -20 சர்வதேசப் போட்டிக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியில் சகலதுறை வீரர் அன்ரே ரஸல் இடம்பெற்றுள்ளார்.

இந்தத் தொடருக்காக அறிவிக்கப்பட்டுள்ள அணி விபரம் வருமாறு:

சாமுவேல் பத்ரி, கார்லோஸ் பிறத்வெய்ட் (அணித்தலைவர்), றயாட் எம்ரிட், அன்றே பிளட்சர், கிறிஸ் கெய்ல், எவின் லூயிஸ், அஷ்லி நேர்ஸ், கீமோ போல், றொவமன் பவல், டினேஷ் ராம்டீன் (விக்கெட் காப்பாளர்), அன்ரே ரஸல், மார்லன் சாமுவேல்ஸ், கெஷ்ரிக் வில்லியம்ஸ். (அ)

# வடமாகாணப் பெருவிளையாட்டு மே 8 முதல் யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 19

வடமாகாணத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 8ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன.

முதல் கட்டப் போட்டிகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெறவுள்ளன. இருபாலாருக்குமான எல்லே யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் மைதானங்களில் எதிர்வரும் 8ஆம், 9ஆம், 10ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

கரப்பந்தாட்டம் எதிர்வரும் 10ஆம், 11ஆம், 12ஆம், 13ஆம் திகதிகளில், கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி மைதானங்களிலும், உதைபந்தாட்டம் எதிர்வரும் 13,14,15,16ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானம், சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானம், சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானம், யாழ்ப்பாணம் இந்து கல்லூரி மைதானம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானம், அரியாலை உதைபந்தாட்ட மைதானம் ஆகியவற்றிலும் நடைபெறவுள்ளன.

ரென்னிஸ் போட்டிகள் 16,17,18ஆம் திகதிகளில் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானம், செஞ். பற்றிக்ஸ் கல்லூரி மைதானம், சுண்டிக்குழி மகளிர் கல்லூரி மைதானம் ஆகியவற்றிலும், கடற்கரை கரப்பந்தாட்டம் 17ஆம் 18ஆம் திகதிகளில் வல்லை கடற்கரை மைதானத்திலும், பளுதூக்கல் 18, 19, 20ஆம் திகதிகளில் சென். ஜேம்ஸ் ஆண்கள் மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

கூடைப்பந்தாட்டப் போட்டிகள் 21, 22, 23ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானம், யாழ் இந்து கல்லூரி மைதானம், சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானம், யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை மைதானம் ஆகியவற்றிலும், உடற்பயிற்சி நிகழ்வுகள் 24ஆம் திகதி ஊர்காவற்துறை சென். அன்ரனிஸ் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

மேசைப்பந்தாட்டம் ஆண்கள் பிரிவினருக்கான ஆட்டங்கள் 28ஆம் திகதி யாழ் மத்திய கல்லூரி மைதானத்திலும், பெண்களுக்கான ஆட்டங்கள் 29ஆம் திகதி யாழ் மத்திய கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

ஹொக்கி 30ஆம், 31ஆம் திகதிகளில் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்திலும், ஆண்களுக்கான சதுரங்கத் தொடர், ஜூன் மாதம் 2ஆ, 3ஆம் திகதிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்திலும், எறிபந்தாட்டம் 4, 5, 6ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

கரம் தொடர் 6, 7ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்திலும், பெண்களுக்கான ஆட்டங்கள் 7ஆம் 8ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்திலும், சதுரங்கப் போட்டிகள் 9, 10ஆம் திகதிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன.



# விரக்தியில் பவட் அலாம்

கராச்சி, ஏப்.19

"பாகிஸ்தான் அணியில் தொடர்ச்சியாகத் தேர்வு செய்யப்படாதமை ஏமாற்றமளிக்கின்றது. இருந்தபோதும் உள்ளூர்ப் போட்டிகளில் ஓட்டங்களைத் தொடர்ந்து பெறவும், உடற் தகுதியுடனிருக்கவும் முயல்கிறேன்" என்று துடுப்பாட்ட வீரர் பவட் அலாம் விரக்தியுடன் தெரிவித்துள்ளார்.

கடந்த நான்காண்டுகளாக, பாகிஸ்தான் முதற்தரப் போட்டித் தொடரான குவைட்-இ-அஸாம் கிண்ணத் தொடரில் 40.71, 55.54, 56, 71.90 என்ற ஓட்ட சராசரியை பவட் அலாம் கொண்டிருக்கின்றபோதும் பல்வேறுபட்ட தேர்வுக் குழுக்கள், அணித்தலைவர்களரல் கடந்த எட்டாண்டுகளாக அவர் அணியில் தேர்வு செய்யப்படவில்லை.

டெஸ்ட் போட்டிகளில் 2009 ஆம் ஆண்டு அறிமுகத்தை மேற்கொண்ட பவட் அலாம், தனது முதலாவது போட்டியிலேயே 168 ஓட்டங்களைப் பெற்றார். குறித்த போட்டிக்கு அடுத்த இலங்கைக்கெதிரான போட்டியிலும் அவ்வாண்டு இறுதியில் நியூஸிலாந்துக்கெதிரான டெஸ்ட் போட்டியொன்றிலும் விளையாடிய பின்னர் டெஸ்ட் போட்டிகளில் அவர் விளையாடியிருக்கவில்லை. பின்னர் 2015ஆம் ஆண்டு வரை 38 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் 24 ரி - 20 சர்வதேசப் போட்டிகளிலும் பவட் அலாம் விளையாடியிருந்தார்.

இந்நிலையில், அயர்லாந்து, இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட்களுக்கான பாகிஸ்தானின் ஆரம்ப 25 பேர் கொண்ட அணியில் பவட் அலாம் உள்ளடக்கப்பட்டிருந்தபோதும் இறுதியில் அவர் தேர்வு செய்யப்படவில்லை. இந்த நிலையிலேயே தன் விரக்தியை பவட் அலாம் வெளிக்காட்டியுள்ளார். (அ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 19.04.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.